செ. கு. எண்: 184 நாள்:26-02-2011

## செய்தி வெளியீடு – 26–2–2011

## 1999 ஆம் ஆண்டு மே மாதம் வரை அரசு அங்கீகாரம் பெற்று செயல்படும் சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத பள்ளிகளுக்கு ஆண்டுக்கு 331 கோடி ரூபாய்ச் செலவில் 11,307 ஆசிரியர் பணியிடங்கள், 648 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் அனுமதி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

1991-92–க்குப் பிறகு சுயநிதியில் இயங்கும் சிறுபான்மை மற்றும் சிறுபான்மையல்லாத பள்ளிகளுக்கு அரசின் மானிய உதவியுடன் பணியிடங்கள் அனுமதிக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினராலும் தொடர்ந்து கோரிக்கை எழுப்பப்பட்டு வந்தது. சட்டமன்றப் பேரவையிலும் அரசின் கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்டது. அதனடிப்படையில் இக்கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்பட்டு, 31.5.1999 வரை மானிய நிதி உதவியின்றி அரசால் அங்கீகரிக்கப்பட்டு தொடங்கப்பட்ட, நிலை உயர்த்தப்பட்ட மற்றும் கூடுதல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்ட பகுதி மானிய உதவியின்றியும், முழுமையாக மானிய உதவியின்றியும் செயல்படும் தனியார் பள்ளிகளுக்கு தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படியும், அரசால் நிர்ணயிக்கப்படும் நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு (Restrictions and Norms) மானியத்துடன் பணியிடங்கள் அனுமதிக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது. இதைச் செயல்படுத்த ஏதுவாக, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் 1973க்கு திருத்தம் வெளியிடுவதற்கும் அரசு முடிவு செய்துள்ளது.

அரசு மானிய உதவியுடன் தோராயமாக 965 தனியார் பள்ளிகளுக்கு (தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்) சுமார் 4,851 ஆசிரியர் பணியிடங்களும், மற்றும் 648 ஆசிரியரல்லாத பணியிடங்களும் – ஆக மொத்தம் 5,499 பணியிடங்கள் 1.6.2011 முதல் அனுமதித்து முதலமைச்சர்

கலைஞர் ஆணையிட்டுள்ளார். இதன் காரணமாக அரசுக்கு ஆண்டுக்கு ஏறத்தாழ 131 கோடியே 13 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

அதேபோல, 1990–1991 ஆம் ஆண்டு வரை தொடங்கப்பட்ட 476 சிறுபான்மை மற்றும் 467 சிறுபான்மையரல்லாத உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அரசால் நிர்ணயிக்கப்படும் வரைமுறைகள் மற்றும் நெறிமுறைகளுக்குட்பட்டு, கூடுதலாகத் தேவைப்படும் 6,456 ஆசிரியர் பணியிடங்களை 200 கோடி ரூபாய்ச் செலவில் அனுமதித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த இரண்டு ஆணைகளின் பயனாக, மொத்தம் 331 கோடி ரூபாய்ச் செலவில், 11,307 ஆசிரியர் பணியிடங்களும், 648 ஆசிரியர் அல்லாத பணியிடங்களும் சிறுபான்மை மற்றும் சிறுபான்மை அல்லாத பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட உள்ளன.

1999 ஆம் ஆண்டுக்குப் பிறகு தொடங்கப்பட்ட பள்ளிகளுக்குப் பணியிடங்கள் அனுமதிப்பது தொடர்பாக அடுத்த கல்வியாண்டில் பரிசீலித்து தக்க முடிவு மேற்கொள்ளப்படும்.

வெளியீடு: –
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.

* * * * * *